பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 25 திங்கட்கிழமை (11.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 16

# திருமலை - மட்டக்களப்பு எல்லையில் நேற்றுப் புதிதாகச் சமர் மூண்டது

## நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த 41 பொதுமக்கள் பலி! பலர் படுகாயம்

மட்டக்களப்பு,டிசெம்பர் 11

திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லைகளில் - பனிச்சங்கேணி மற்றும் கட்டுமுறிவுப் பகுதிகளில் - நேற்று ஞாயிற்றுக்கிழமை, இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புதிதாக மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்தச் சமர்களின்போது 41 பொதுமக்கள் உட்பட மொத்தம் 60 பேர் உயிரிழந்ததாக செய்தி நிறுவனம் ஒன்று நேற்றிரவு அறிவித்தது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இராணுவம் மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புகளிடம் திரட்டிய தகவல்களின் அடிப்படையில் மேற்கண்ட விவரம் தெரியவந்தது.

விடுதலைப் புலிகளின் பகுதிகளில் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களில் 41 பேர் உயிரிழந்தனர்.

இரு தரப்புகளும் நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை விட்டு விட்டு பரஸ்பரம் ஆட்லறி மற்றம் மோட்டார் தாக்குதல்களை மாறி மாறி நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய மோதல்களினால் 3, 300 இற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்ததாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தெரிவித்தது.

இரு தரப்புகளும் நடத்திய கடும் சண்டையில் பெரும் எண்ணிக்கையான சிவிலியன்கள் சிக்குண்டிருக்கலாம் என்றும் செஞ்சிலுவைக் குழு அச்சம் தெரிவித்தது.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களை அனுசரித்து நடக்குமாறு சர்வதேச செஞ்சிலுவைக் குழு இராணுவத்தினரையும் விடுதலைப் புலிகளையும் கேட்டுள்ளது. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் நடமாட்ட சுதந்திரத்துக்கு மதிப்பளிக்குமாறும் செஞ்சிலுவைக் குழு இரு தரப்புகளையும் கேட்டுள்ளது.

வாகரையில், இராணுவத்தினர் புதிதாகத் தாக்குதல்களை நடத்தி முன்னேற முயன்றதாகவும் -

படையினர் நடத்திய தாக்குதல்களால் தங்கள் பகுதியில் நலன்புரி நிலையங்களில்

(06ஆம் பக்கம் பார்க்க)

## படுவான்கரையிலும் மோதல்

மட்டக்களப்பு, டிசெ.11

மட்டக்களப்பு, படுவான்கரை - புலிபாய்ந்தகல் பகுதியில் நேற்று அதிகாலை இராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் தமது போராளிகள் இருவர் உயிரிழந்தனர் என்று புலிகள் தெரிவித்திருக்கின்றனர்.

இராணுவத்தினர் அப்பகுதியில் முன்னேற முற்பட்டபோது மோதல் நடந்தது என்று புலிகள் கூறுகின்றனர்.

ஞாயிற்றுக்கிழமை அதிகாலை புலிபாய்ந்தகல் பகுதியிலுள்ள பெண்டுகள்

(06ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலையில் ஷெல் வீச்சு சிப்பாய் காயம்

கொழும்பு,டிசெ.11

முகமாலை முன்னரங்கப் பகுதிகள் மீது நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் ஷெல் மற்றும் மோட்டார் த் தாக்குதலை நடத்தினர்.

இத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என தேசிய பாதுகாப்புக்கான ஊடகத் தகவல் மையம் தெரிவித்துள்ளது. படையினர் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## பத்து இளைஞர் கடத்தல்

கொழும்பு, டிசெ.11

மட்டக்களப்பிலிருந்து தனியார் பஸ் ஒன்றில் கொழும்பு நோக்கி வந்த இளைஞர்கள் 10பேர் வழியில் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டிருக்கின்றனர்.

இவர்களில் ஒருவர் சர்வதேச தொண்டு நிறுவனம் ஒன்றின் பணியாளர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பிலிருந்து வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் புறப்பட்ட தனியார் பஸ் செங்கலடியை அடைந்தபோது அப்பிரதேசத்தில் இனந்தெரியாத நபர்கள் வழிமறித்து, 18-30 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களை இறக்கி கடத்திச் சென்றனர்.

தொண்டு நிறுவனம் ஒன்றில் தொழில் அதிகாரியாகக் கடமையாற்றும் சர்வன் (வயது-26) என்பவரும் கடத்திச் செல்லப்பட்டவர்களில் ஒருவர் என்று கூறப்படு

(06ஆம் பக்கம் பார்க்க)

## இராமேஸ்வரம் பகுதி கடலுக்குள் மரப் பெட்டியில் றொக்கெட் குண்டு!

### அடுத்தடுத்து இரு தடவைகள் வலையில் சிக்கின

மதுரை, டிச. 11

இராமேஸ்வரம் கடற்பகுதியில் இரண்டாவது முறையாக றொக்கெட் குண்டுகள் மீனவர்களால் மீட்கப்பட்டுள்ளன.

அவர்கள் கடற்பரப்பில் வழமையாகத் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளைகளில் அவர்கள் விரித்த வலைகளில் இரண்டு தடவைகளும் மரப்பெட்டிகள் அகப்பட்டன.

அவற்றை கரைசேர்த்துத் திறந்து பார்த்தபோது அவற்றுக்குள் றொக்கெட் குண்டுகள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன.

இரண்டாவது தடவையாக நேற்று ஞாயிற்றுக்கிழமை மீனவர்களின் வலையில் மரப்பெட்டி சிக்கியது.

அதற்கு முதலில் - கடந்தவாரம் இராமேஸ்வரம் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் வலையில் முதல்

(06ஆம் பக்கம் பார்க்க)



மீட்கப்பட்ட றொக்கட் குண்டுகளை படை அதிகாரிகள் பார்வையிடும் போது...

### ஆயுதங்களை அகற்றித் தாக்குதலை நிறுத்துமாறு

## புலிகளுக்கு அழுத்தம் கொடுக்குமாறு கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுதல்

கொழும்பு,டிசெ.11

வாகரைப் பகுதியில் இருந்து ஆயுதங்களை அகற்றி படையினர் மீது தாக்குதலை நிறுத்தும்படி விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்குமாறு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தாம் கேட்டுள்ளதாக - பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார். அவ்வாறு முடியாவிடின் இவ்விடயத்தை சர்வதேசத்துக்கு தெரிவிக்கும்படியும் தாம் கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கில் தாக்குதல் நடக்கும் பகுதிக்கு செல்வதற்குப் பாதுகாப்புப் பிரச்சினை இருப்பதாக கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

அந்த இடங்களுக்கு செல்வதற்கான

(06ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பரீட்சை மோதலால் குழம்பும் நிலை

மட்டக்களப்பு, டிசெ.11

இன்று ஆரம்பமாக இருக்கும் ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் தடைப்படக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும், புலிகளின் பிரதேசங்களிலும் பல இடங்களில் மோதல் நடைபெற்றுவருகிறது. ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அலைகின்றனர். பரீட்சை நிலையங்களாக

(06ஆம் பக்கம் பார்க்க)

## போர் மூளுவதைத் தடுக்க தெற்கில் புதிய கூட்டணி?

### மிதவாதக் கட்சிகளின் பிரமுகர்கள் முன்முயற்சி

கொழும்பு, டிசெ.11

தேசியப் பிரச்சினைக்குப் பேச்சு மூலமே தீர்வு காணப்பட முடியும் என்று நம்புகிற - அந்நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குகின்ற - மிதவாதப் போக்குடைய அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து கூட்டணி ஒன்றை உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் மீண்டும் முழு அளவிலான யுத்தம் ஒன்று வெடி[illegible]

(06ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பொது மக்களைக் கேடயமாக பயன்படுத்துவதாக அரசு குற்றச்சாட்டு

கொழும்பு,டிசெ.11

மட்டக்களப்பு, வாகரையில் மக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்தி படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்களைத் தொடுக்கின்றனர் என்று படையினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

[illegible] பொதுமக்கள் இலக்குகளை நோக்கி தாக்குதல்களை நடத்துவதை இயன்றளவு தவிர்த்து வருவதாகவும் அரசின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க கூறினார்.

எனினும் தமது பாதுகாப்பின் நிமித்தம், எந்த இடத்திலிருந்து தாக்குதல் நடத்தப்படுகிறதோ அந்த இடங்களை நோக்கித் தாங்கள் தாக்குதல் நடத்துவதை தவிர்க்க முடி

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சிவநாதன் சத்தியருபவதி



சரவணை மேற்கைப் பிறப்பிடமாகவும் இல. 192 பிறவுண் றோட்டை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவநாதன் சத்தியரூபவதி நேற்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சிவநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சீவரத்தினம் - இரத்தினம் தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - புஸ்பவதி தம்பதியரின் மருமகளும் சதாரூபன் (பிரான்ஸ்), யாழினி, சிவஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் சுகிர்ஜா (லண்டன்), பிரபாலன் (லண் டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் கனகரூபவதி, திருமகள், தவகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் நாகேஸ்வரன் (பிரான்ஸ்), தனலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற கணேஸ்வரன் மற்றும் ஜெயலட்சுமி, மல்லிகா (சுவிஸ்), சாந்தா (பிரான்ஸ்), விக்னேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெகதீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு பிற்பகல் 2 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 192, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.*

தகவல்: **ச. சிவநாதன்** (கணவர்).

## திருமதி சின்னத்துரை அன்னம்மா



இருபாலையைப் பிறப்பிடமாகவும் லவ்லேன், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்துரை அன்னம்மா நேற்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி. சின்னத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசம்மா, அன்னபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசையாவின் மைத்துனியும் ஜீவகலா (வவுனியா), சூரியகலா ஆகியோரின் அன்புத் தாயும் பூபாலசிங்கம் (Wireless Operator), பாஸ்கரன் (உரிமையாளர்- அபிராமி தொலைத்தொடர்பு நிலையம் - திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மாமியும் சுபாசினி, தாரணி, லோஜினி, கோகுலன், தாட்சாயினி, யசோதரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாருஜன், கரிஸ் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*லவ்லேன், உடுவில்.* (56738)

தகவல்: **இ. பாஸ்கரன்** (மருமகன்).

## கனகசபை சிவஞானம்



நவாலி கிழக்கைச் சேர்ந்த கனகசபை சிவஞானம் நேற்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புக் கணவரும் சுஜீபா (பிரான்ஸ்), சுஜீகரன் (பிரான்ஸ்), சுஜிகலா (மட்டக்களப்பு), சுஜிந்தினி ஆகியோரின் பாச மிகு தந்தையும், குணபாலன் (பிரான்ஸ்), சிவபாலன் (நவாலி), ஜெயபாலன் (சுவிஸ்), கணேசபாலன் (சுவிஸ்), நாகேஸ்வரி (சுவிஸ்), பஞ்சபாலன் (லண்டன்) ஆகி யோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (11.12.2006) திங்கட்கிழமை இன்று இடம்பெற்று, பூதவுடல் மு.ப. 10 மணியளவில் தகனக்கிரியைக்காக நவாலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*முருகமூர்த்தி கோயிலடி, நவாலி கிழக்கு, மானிப்பாய்.* (56728)

தகவல்: **சிவபாலன்** (சகோதரன்).

## வெள்ளையர் பொன்னையா

வளலாய், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி மகா வித்தியாலய வீதியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வெள்ளையர் பொன்னையா நேற்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வெள்ளையர் - பாருபதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சித்த வைத்தியர் ஆசையர் - தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் திருமதி நாயகத்தின் அன்புக் கணவரும் சந்தானலட்சுமி, பரமேஸ்வரி, [illegible]மநா[illegible]ன் (இலங்கை வங்கிமேற்தரக்கிளை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவசம்பு (ஓய்வு பெற்ற அதிபர்), சிவஞானம் (ஈரோவில் நிறுவனம் நல்லூர் - ஓய்வுபெற்றசாலைப் பொறியியலாளர் இ.போ.ச), ஜோதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் கயல்விழி, எழிலரசன் (கிராம அலுவலர், புத்தூர் மேற்கு), எழில்மதி (மக்கள் வங்கி, அச்சுவேலி), மதியரசன் (எழுதுவினைஞர் - கிளிநொச்சி), சுதாகரன் (சசி தொலைத்தொடர்பு நிலையம், வவுனியா), பிரபாகரன் (மட்டக்களப்பு பல்கலைக்கழக மாணவன்), சிறிகரன் (மொறட்டுவ பல்கலைக்கழக மாணவன்), சரவணகோசி (பொஸ்கோ வி. மாணவன்) ஆகியோரின் அன்புப் பேரனும் தாரகாவின் பூட்டனாருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை முழங்கன் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*அச்சுவேலி மகா வித்தியாலய வீதி, அச்சுவேலி.* (56733)

தகவல்: **பொ.பத்மநாதன்** (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்).

## திருமதி மாணிக்கம் (பவளம்) நடராசா



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மாணிக்கம் நேற்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி நடராசா (ஐயா) அவர்களின் மனைவியும் சுபத்திரையின் அன்புத் தாயும் காலஞ்சென்ற வை. கந்தசாமி (ஆசிரியர்) அவர்களின் மாமியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, மார்க்கண்டு, வியாழாச்சி, சோதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பத்தானை வீதி, தாவடி தெற்கு, கொக்குவில்.* (56739)

தகவல்: **சுபத்திரை** (மகள்), **மார்க்கண்டு குமாரசாமி** (மருமகன்).

## வீடு வாடகைக்கு

பருத்தித்துறை வீதி, நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் மாடி வீடு வாடகைக்குண்டு.

**தொடர்பு: 222 5739.**

## கைப்பை தவறிவிட்டது

09.12.2006 சனிக்கிழமை கே.கே.எஸ்ஸில் இருந்து யாழ். வந்த மினிபஸ்ஸில் எனது கைப்பை (உடுப்புகள்) தவறிவிட்டது. அதனைத் தவறுதலாக எடுத்துச் சென்றவர்கள் தயவு செய்து பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 021 222 6203.

## தவறிவிட்டது

சிவகுரு - இராஜேஸ்வரியின் அ.அட்டை (இல. 575364250V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிடும் விலாசத்திற்கு தந்துதவும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சந்தை மேற்கு ஒழுங்கை, பருத்தித்துறை. தகவல்: சி. இராஜேஸ்வரி.

## கணக்கீடு P. பகீரதன்

04.12.2006 இல் நடைபெற்ற பரீட்சை தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளன.

Business College
11.12.2006 இன்று 12.30 - 4.00

நாவலர் இன்ஸ்ரிரியூட்
13.12.2006 - புதன் 8.30 - 1.00

விக்னா கல்வி நிறுவனம்
15.12.2006 - வெள்ளி 8.30 - 1.00

**பரீட்சைக்கு தோற்றாத, வெளி மாணவர்களும் பங்கு பற்றலாம்.**

## கண்ணீர் அஞ்சலி



சுதுமலையைச் சேர்ந்த அமரர் கலாநிதி

**S.K. சண்முகநாதன்**
**(M.A., Ph.D - முன்னாள் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)**

அன்னாரின் திடீர் மரணம் எங்கள் எல்லோரினது உள்ளத்திலும் மிகவும் ஆழ்ந்த கவலையையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அன்னையைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**சிவஸ்ரீ**
**ச. மஹேஸ்வரக்குருக்கள்**
**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**
**அம்மன் கோவில், சுதுமலை.**

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்தம்பி தாமோதரம்பிள்ளை செல்லத்துரை

**(முன்னாள் அப்துல் அலி முகமது அலி முகாமையாளர்)**

பாலாவோடை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை செல்லத்துரை நேற்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான தாமோதரம்பிள்ளை - நாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகனும் துரைராசா (கொழும்பு) - காலஞ்சென்ற பொன்னம்மா, சரஸ்வதி (வவுனியா), சிவப்பிரகாசம் (வவுனியா), சிவபாக்கியம் ஆகியோரின் சகோதரனும் இராசலட்சுமி, அமரர் சதாசிவம் தியாகராசா, சிவபாக்கியம், சோமசுந்தரம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, வழுக்கையாறு மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கமலவாசா, வட்டு.கிழக்கு, சித்தன்கேணி.* (56702)

தகவல்: **கா.சோமசுந்தரம்** (மைத்துனர் - பிறப்பு இறப்பு விவாகப் பதிவாளர்).

## கந்தையா சதாநந்தன்

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் வி.ரி.எஸ். வீதி, உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சதாநந்தன் நேற்று (10.12.2006) காலமானார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் ச. பத்மநாதன் (ஜேர்மனி), பா. சாந்தினி (ஜேர்மனி), ந.நந்தினி (சுவிஸ்), சா.குமுதினி (சுவிஸ்), ச. ஜெகநாதன் (அம்பாள் களஞ்சியம் - உரும்பிராய்), த.சுகந்தினி (ஜேர்மனி), ச.றோகினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் வேம்பன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வி.ரி.எஸ். வீதி, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.*

தகவல்: **ச. ஜெகநாதன்** (மகன்).

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 . 07 . 1939 — மறைவு 11 . 12 . 2005

**திருமதி அலோசியஸ் சூசையம்மா**

பத்துமாதம் சுமந்து பகலிரவாய் எமக்காகவே வாழ்ந்து
எங்களில் ஒருவராய் எம் குடும்பப் பெருமை பேணி
நோவிலும் வலியிலும் எம் உயர்வையே நினைத்திருந்து
ஆண்டவரின் அடியினைச் சேர்ந்த எங்கள் குடும்பவிளக்கு
அமரர் அலோசியஸ் சூசையம்மா அவர்களை நினைவு கூருகிறோம்.

*185/9, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.* (56722)

*மக்கள் மற்றும் குடும்பத்தினர்.*

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குணநிதி சிறிரஞ்சன்



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி குணநிதி சிறிரஞ்சன் அவர்கள் 09.12.2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிறிரஞ்சனின் (சுங்க உதவி அத்தியட்சகர், வருகை விரிவுரையாளர் முகாமைத்துவ நிதி பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்) மனைவியும் வினோதனின் தாயும் அனலைதீவைச் சேர்ந்த வரதராஜன் - புஸ்பமணி (கனடா) தம்பதியரின் மகளும் புளியங்கூடலைச் சேர்ந்த அமரர் நடராஜா (ஆசிரியர்) - நீலாம்பாள் தம்பதியரின் மருமகளும் ஜெயசீலன் (கனடா), குணசீலன் (கனடா), கிரிதரன் (கனடா), வசந்தி (கனடா), தனபாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஞானேஸ்வரி (சாந்தா - பிரான்ஸ்), சிறிதரன் (கனடா), உமா (கனடா), விஜிதா (கனடா), மதிவதனா (கனடா), ரதன் (கனடா) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெற்று பிற்பகல் 5 மணிக்கு தகனக்கிரியை கனத்தை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*25, 1/7, E.S. பெர்ணான்டோ மாவத்தை, கொழும்பு - 06. தொ.பே. 0112 553341.* (சி-51521)

தகவல்: **கணவர்.**

## வேலுப்பிள்ளை கார்த்திகேசு

**(முன்னாள் ஊழியர் - சீமெந்து கூட்டுத்தாபனம்)**



முதலாம் கட்டை, கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த வேலுப்பிள்ளை கார்த்திகேசு நேற்று (10.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் வல்லிபுரம் - தெய்வானைப்பிள்ளையின் மருமகனும் காலஞ்சென்ற செல்லம்மாவின் பாசமிகு கணவரும் அமரர்களான கணபதிப்பிள்ளை, இலட்சுமிப்பிள்ளை மற்றும் பொன்னம்மா ஆகியோரின் சகோதரரும் மனோன்மணி, ருக்மணி, தர்மலிங்கம் (அமரர்), கணேசபிள்ளை, மகாதேவன், பத்மாவதி, வேதநாயகம், பரிமளகாந்தி (அமரர்), வரதராஜா, ஸ்ரீரஞ்சன் (சாவகச்சேரி நகர சபை) ஆகியோரின் அன்புத் தந்தையும் கார்த்திகேசு, நாகலிங்கம் பவானி, செல்லம்மா, பத்மாவதி, தில்லைநாதன் (அமரர்), ரெங்கநாயகி, இரஞ்சினி தேவி, கருணாதேவி ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*முதலாம் கட்டை, கல்வயல், சாவகச்சேரி.* (56729)

தகவல்: **பிள்ளைகள்** (060 221 2360).

## சிவசம்பு தனேஸ்வரன்

தில்லைகட்டி, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சிவசம்பு தனேஸ்வரன் 07.12.2006 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு பொன்னுப்பிள்ளையின் அன்பு மகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற தம்பித்துரை, துரைசிங்கம் மற்றும் தனபாலசிங்கத்தின் அன்புச் சகோதரனும் குகவதனா, குகதாஸ், உதயணன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஸ்ரீகதிர்காமர், சிவாஜினி, சர்மினி ஆகியோரின் அன்பு மாமனும் சபிதா, மேனன் ராம்குமார் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.12.2006) திங்கட்கிழமை 10 மணிக்கு கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

*தில்லைகட்டி, சுன்னாகம்.* (சி-51519)

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

## செல்லத்துரை குகநாதன் (தவம்)

**(செல்வநாகபூசணி அம்பாள் திருக்கோயில் தர்மகர்த்தாவும், முன்னாள் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச. கொள்வனவு உத்தியோகத்தரும்)**



வேலணை, கூழாவடியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லையா மற்றும் நல்லம்மா ஆகியோரின் மருமகனும் புஸ்பகாந்தியின் அன்புக் கணவரும் ஜயந்தன், நிர்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் அரியராசா (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற மலர்மகள், சண்முகநாதன், திருமகள் (கொழும்பு), காலஞ்சென்ற செந்தில்நாதன் ஆகியோரின் சகோதரரும் பாலகிருஷ்ணன் (பாலு), ராஜேஸ்வரி (நல்லபிள்ளை), புஸ்பலதா (மலர்) ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று (11.12.2006) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*108, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். தொ.பே: 222 9319.* (56737)

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாக்கடலில் மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைத் தளர்த்த படையினர் இணக்கம்

## மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தகவல்

குருநகர், டிசெ.11

குடாக்கடலில் மீன் பிடிக்க விதிக்கப்பட்டிருந்த சில தடைகளை நீக்குவதாகப் படைத்தரப்பு உறுதி அளித்துள்ளது என அந்தப் பகுதி மீனவர் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைக் கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் படைத்தரப்பினருக்கும் இடையிலான சந்திப்பொன்று குருநகர் இறங்குதுறைப் படைப் பொறுப்பதிகாரியின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ்.நகர படைத்தளபதி, பலாலி கூட்டுப்படைத் தளபதி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டதாக சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

✱கரையிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரம் வரை சென்று மீன் பிடிக்கலாம்.

✱அரியாலைக் கரையில் படையினரின் பாதுகாப்பு எல்லைகளில் மீனவர்களால் விடப்பட்டுள்ள பட்டி வலைகளை இன்று திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை மீனவர்கள் சென்று கரைக்குக் கொண்டு வர வேண்டும். இத்தூரத்திற்கப்பால் இக்கடற்பகுதியில் உள்ள வலைகளை எடுக்க அனுமதி இல்லை. இவ்வாறு எடுத்துக் கரைக்குக் கொண்டுவரப்படும் வலைகளை மீளவும் கடலில் நடுவது தொடர்பாகப் பின்னர் தீர்மானிக்கப்படும்.

✱தினமும் 60 வள்ளங்களில் 250 மீனவர்கள் சுழற்சி முறையில் மீன் பிடிக்கச் செல்ல முடியும்.

✱காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை மீன் பிடிக்க முடியும்.

✱ஒவ்வொரு நாளும் 15 இழுவைப் படகுகளில் பிற்பகல் 2 மணி தொடக்கம் மறுநாள் காலை 8 மணிவரை குடாக்கடலில் படையினர் குறிப்பிட்டுள்ள ஆழ்கடலுக்குச் சென்று இரவுத் தொழிலை மேற்கொண்டு திரும்பலாம்.

✱மீனவர்கள் கொண்டு செல்லும் மீன் பிடிக் கலங்களில் வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டிருக்க வேண்டும்.

✱இரண்டு கிலோமீற்றர் தூரம் சென்று மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள மீனவர்கள் பாய்கள் மூலமே தொழில் செய்ய முடியும். ஆனால் ஆழ்கடலுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ள இழுவைப் படகுகளில் இயந்திரம் மூலம் தொழில் செய்ய முடியும்.

✱குருநகர் இறங்குதுறைக்கு அருகாமையில் கடற்கரையில் அமைந்துள்ள குருநகர், மீன்வாடியில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை மீன் விற்பனை செய்ய முடியும்.

மேற்கூறிய தீர்மானங்கள் யாவும் இன்று திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளதாகவும் தீர்மானிக்கப்பட்டன என கடற்றொழிலாளர் சங்கப்பிரதிதிகள் தெரிவித்தனர். (202-51)



மக்கள் வங்கியின் வட வலய பொது முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்ற ரி.கே.ஆனந்தராசாவிற்கு சுன்னாகம் மக்கள் வங்கிப் பணியாளர்கள் அண்மையில் வரவேற்புபசாரம் நடத்தினர். நிகழ்வில் சமூக சேவையாளர்களான சபா.புஸ்பநாதன், எஸ்.சண்முகநாதன் ஆகியோர் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். படத்தில் வடவலயப் பொது முகாமையாளர் உட்பட வங்கி அதிகாரிகளும் காணப்படுகின்றனர்.

## பால்மா விநியோகம் இன்று ஆரம்பம்

யாழ். மாவட்டத்தில் உள்ள 18 ஆயிரத் திற்கு மேற்பட்ட3 தொடக்கம் 5 வயது வரையான குழந்தைகளுக்கு அங்கர் 3+ பால்மா இலவசமாக இன்றுமுதல் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை வழங்கப்பட வுள்ளது.இவற்றை வழங்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வந்துள்ளது.

சுகாதார தாய் சேய் நல சிகிச்சைநிலையங்கள் ஊடாக குடும்பநல உத்தியோகத்தர்களால் பால்மா விநியோகிக்கப்படவுள்ளது.

இதற்கான பால்மாவை கொழும்பில் இருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் விமானம் மூலம் எடுத்துவந்து சகல சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளுக்கும் விநியோகம் செய்துள்ளனர்.குழந்தைகளின் குழந்தை வளர்ச்சிப் பதிவேட்டில் பதிவு செய்தே பால்மா விநியோகம் செய்யப்படும் என்று பிரதிமாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (203)

### வலி.தென் மேற்கில் சிற்றுண்டிகளுக்கு தட்டுப்பாடு

மானிப்பாய் டிசெ.11

வலி.தென்மேற்குப் பிரதேச உணவகங்களில் சிற்றுண்டி வகைகள் இல்லாமையால் பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள்.

சீனி, மா, பருப்பு வகைகளைப் பெற்றுக் கொள்வதில் கடை உரிமையாளர்கள் எதிர் கொள்ளும் சிரமமே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

(202-90)

### தென்மராட்சியில் சத்துணவு விநியோகம்

தென்மராட்சி வலயக்கல்விப் பணிமனைக் குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் கோன் சோயா மா பக்கற்றுகள் வழங்கப்பட்டன.

பாடசாலைகளில் மதிய உணவு பெறும் மாணவர்களுக்கு மட்டும் இந்த சோயா மா வழங்கப்பட்டது. (202-31)

### கணணி அறிவை மதிப்பிடும் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ.11

மகாண அரச முகாமைத்துவ சேவையின் தரம் III இல் கடமையாற்றும் ஊழியர்களிடமிருந்து கணனித் திறமையை மதிப்பீடும் எழுத்துப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை வடக்கு-கிழக்கு மகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு கோரியுள்ளது.

விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் யாழ் பிராந்திய அலவலகத்தில் பார்வையிடலாம் எனப் பிராந்திய ஆணையாளர் தெரிவித்தார்.

## குடாநாட்டில் சாதரண தரப் பரீட்சை 176 நிலையங்களில் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிசெ.11

இன்று திங்கம்கிழமை ஆரம்பகவுள்ள ஜீ.சி.ஈ (சாதாரண) தரப் பரீட்சைகள் யாழ். மாவட்டத்தில் 176 நிலையங்களில் நடைபெறவுள்ளன.

பரீட்சையைக் கண்காணிக்க 26 ஒருங்கிணைப்பு நிலையங்கள் செயற்படுத்தப்படுவுள்ளன.

பரீட்சை வினாத்தாள்களைச் சேகரிக்கும் நிலையங்களாக யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகியன செயற்படவுள்ளன.

பரீட்சைக்கான வினாத்தாள்களில் ஒரு தொகுதி ஏற்கனவே விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்-

இரண்டாவது தொகுதி வினாத்தாள்கள் எதிர்வரும் வியாழக்கிழமை அனுப்பி வைக்கப்படும் என்றும்-பரீட்சை ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (202)

### தென்மராட்சிப் பகுதியில் சாதாரண தர மாணவர்களுக்கு மண்எண்ணெய் விநியோகம்

சாவகச்சேரி, டிசெ.11

தென்மராட்சி-சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக மாணவர்களுக்கு ஒரு லீற்றர் வீதம் மண்எண்ணெய் வழங்கி வருகின்றது.

பாடசாலை அதிபரின் சிபாரிசுடன் இதனை மாணவர்கள் பெற்றுக் கொ ள்ள வசதி செய் [illegible] தெரிவிக்கப்பட்டது. (202-31)


ஓம் விராட் விஸ்வப் பிரமனே நம

### திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விய வருடம் கார்த்திகைத் திங்கள் 28 ஆம் நாள் (14.12.2006) வியாழக்கிழமை நண்பகல் 12.45 - 1.30 மணிவரையுள்ள அத்த நட்சத்திரமும் சித்தயோகமும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்,

திரு.திருமதி சிவசுந்தரம் தம்பதியரின் ஏகபுத்திரன் திருவளர் செல்வன்
**செந்தில்க்குமரன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி சண்முகலிங்கம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரி திருவளர் செல்வி
**சிவப்பிரியா**
அவர்களுக்கும்

இத்தியடி விநாயகப்பெருமான் திருவருள் துணைகொண்டு டச்சு வீதி, சாவகச்சேரி 'ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தில்' திருமணம் நடத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி சிவசுந்தரம் குடும்பத்தினர்,
திரு.திருமதி இலங்கேஸ்வரன் குடும்பத்தினர்,
கருவேலடி லேன்,
கொக்குவில் கிழக்கு,கொக்குவில்,

திரு.வே.ச.இரத்தினம் பத்தர் (பேரன்),
திரு.திருமதி சண்முகலிங்கம் குடும்பத்தினரும் சகோதரர்களும்,
பொற்தொழிலாளர் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி

(இரு வீட்டார் அழைப்பு) (வதனி ஜூவல்லறி, கொடிகாமம்)


## செய்திச் சரம்

### பாடசாலை விட்டு விலகியோருக்கு

யாழ்ப்பாணம், டிசெ.11

சமூக தொழில்நுட்பக் கல்வி நிலையத்தால் பல்வேறு தொழில் பயிற்சிநெறிக்கான விண்ணப்பங்கள் பாடசாலையை விட்டு விலகிய 16-30 வயதுடையவர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன.

விண்ணப் பிக்க விரும்புவோர் எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் 'இயக்குனர், கொம்ரெக், சுழிபுரம்' என்னும் முகவரிக்கு விண்ணப் பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

### மகப்பேற்று பயிற்சி

யாழ்ப்பாணம், டிசெ.11

சுகாதாரத் திணைக்களத்திலுள்ள வைத்திய நிறுவனங்களில் கடமையாற்றும் வைத்திய உத்தியோகத்தர்களுக்கு அவசர கால மகப் பேற்று பயிற்சிநெறி இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தாதிகள் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

### அன்னை சாரதா தேவியின் ஜெயந்திவிழா

யாழ்ப்பாணம், டிசெ.11

கொக்குவில் ஸ்ரீ ராகிருஷ்ண சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் தூய அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரின் 154 ஆவது ஜெயந்தி விழா நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சேவாச்சிரமம் இயங்கும் தாவடி இ.த.க. பாடசாலைப்பழைய கட்டடத்தில் நடைபெறவுள்ளன. (202)

### மண்எண்ணெய் விநியோகம்

அரியாலை, டிசெ 11

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முற்றவெளி எரிபொருள் விற்பனை நிலையத்தில் இன்று திங்கட்கிழமை மண் எண்ணெய் விநியோகிக்கப்படவுள்ளது.

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் ஜே/58, ஜே/69, ஜே/71, ஜே/72, ஜே/73, ஜே/81, ஜே/83 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுக் குட்பட்ட மக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு இம்மாதத்திற்கான மண்எண்ணெய் விநியோகிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (202-17)

✱ ✱ ✱

திருநெல்வேலி குகன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இன்று காலை 8 மணி முதல் 2 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் விநியோகிக்கப்படவுள்ளது என முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஜே/ 114, ஜே/ 121, ஜே/ 122, ஜே/ 126 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளுக் குட்பட்ட பங்கீட்டு அட்டைகளுக்கு இந்த விநியோகம் இடம்பெறவுள்ளது. (203)

### நாவலர் குருபூசை

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் இந்து மன்றம் நடத்தும் நாவலர் குருபூசை இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் ஸ்ரீ சோமாஸ்கந்தர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

✱ ✱ ✱

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஆதரவில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

✱ ✱ ✱

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் நாவலர் குருபூசை இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


### வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)

### மீள் கேள்வி அறிவித்தல் - 2007

எமது மேற்படி விடயம் தொடர்பான 07.11.2006ஆம் திகதிய உதயன் பத்திரிகை விளம்பரத்தின் பிரகாரம் கும்பலை மாட்டிறைச்சிக்கடை, மல்லாகம் மாட்டிறைச்சிக்கடை என்பன தவிர்ந்த ஏனையவற்றிற்கு மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி : 20.12.2006
புதன்கிழமை பி.ப 3 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 21.12.2006
வியாழக்கிழமை நண்பகல் 12 மணிவரை

கேள்விகள் திறக்கும் திகதி : 21.12.2006 வியாழக்கிழமை பி.ப 2 மணி

ஏனைய மேலதிக விவரங்களை தலைமை அலுவலகம், மல்லாகம்/தெல்லிப்பளை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
காங்கேசன்துறை
(மல்லாகம்).
08.12.2006

திருமதி ஸ்ரீறஞ்சிதமலர் மாணிக்கம்,
செயலாளர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருஷாப்திக சிரார்த்தம்



மண்ணுலகில் மானுடராய் 20 - 07 - 1942

வானுறையும் தெய்வமாய் 22 - 11 - 2005

அமரர்
'ஞான ஏந்தல்' பிரம்மஸ்ரீ

### விஸ்வநாதக் குருக்கள் பரிபூரணானந்தசர்மா

(ஓய்வு பெற்ற உப அதிபரும், பத்திரிகையாளரும், சமாதான நீதிவானும்)

பார்த் திபப் பேராண்டிற் பார் நடுங் குங் கார்த்திகையைச்
சார் கிருஷ்ண பட்சத்து சப்தமியில் - பேரார்
பரி பூரணானந்தப் பண்பான ஆசான்
அரிய சிவன் தாளடைந்தான் ஆம்.

*'கணேசவாசம்'*
*கற்பொக்கணை,*
*அம்பலவாணர் வீதி, உடுவில்.* (56654) குடும்பத்தினர்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
### உத்தியோகபூர்வ முடிவுகள்

838 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

கடகம் 27 40 45 50

08-12-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5584908 - 5599111

ஜக்பொட் பரிசு ருபா. 6,813,675/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 314,187 | 10/- | 3,141,870/- |
| 2 இலக்கங்கள் | 28,820 | 20/- | 576,400/- |
| 1 இல. + லக்கினம் | 28,467 | 30/- | 854,010/- |
| 2 இல. + லக்கினம் | 2,619 | 100/- | 261,900/- |
| 3 இலக்கங்கள் | 771 | 500/- | 385,500/- |
| 3 இல. + லக்கினம் | 69 | 5,000/- | 345,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 6,813,675/- | - |
| மொத்தம் | | | 5,964,680/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 374,942 | | 6,988,180/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ருபா 7,164,500/-

தொடர் இல.471430 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 டிசம்பர் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கண்டி | 5595592-0-68 |
| இரத்தினபுரி | 5597225-8-79 |
| திருகோணமலை | 5586228-7-44 |
| களுத்துறை | 5584994-7-05 |
| புத்தளம் | 5592289-5-09 |

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
### இராசா பாக்கியம்

தோற்றம் 08 07 1936 மறைவு 12-11-2006

12.11.2006அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்தும், அனுதாபச் செய்திகளைப் பத்திரிகைகளிலும் தந்தி,தொலைபேசி மூலமாகவும் ஆறுதல்தெரிவித்தும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் உற்றார், உறவினர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் 13.12.2006 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*'வேரவில்',*
*இளவாலை வடக்கு,*
*இளவாலை.* (56553)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*Canopus Professional Editing Card,*
*Professional Editing Software*
*விற்பனைக்குண்டு.*
*தொடர்பு: 021 4591907*

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 29, செவ்வாய்க்குற்றம் இல்லாத , க.பொ.த (சா/த) ஒரே தடவையில் கணித பாடம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் அரச, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவராக இருந்தாலும் விரும்பத்தக்கது.

*தொடர்புகள்: க.குணசீலன் (ஆசிரியர்),*
*ஆசிரியர் வீதி, சங்கத்தானை. சாவகச்சேரி.*

## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**

தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, (சி/50463) 0785325501.

## தவறிவிட்டது

43/1, இராசசிங்கம் வீதி, திருநகர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னவன் கேதீஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை இல. 822314457 V, சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் காப்புறுதி என்பன தவறிவிடப்பட்டுள்ளன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம் 2223450 இல் தொடர்புகொள்ளவும்.

## மரண அறிவித்தல்கள்

### பரமகுரு நவரத்தினம் (K.P.N. சந்திரன்)



சாவகச்சேரி கட்டுக்காணி வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பரமகுரு நவரத்தினம்(சந்திரன்) 06.12.2006 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமகுரு - நாகரத்தினம் தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்ற கந்தையா - சத்தியபாமா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயவதியின் கணவரும் ரிஷிகேசன், சிந்தூரி ஆகியோரின் தந்தையும் கெங்கேஸ்வரன்(கொழும்பு), சுபத்திரா, சுமங்கலா, சதீஸ்குமார்(அப்பன் - பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும் ராஜரதி, பரமேஸ்வரன், சண்முகநாதன், செல்வநாயகி(பிரான்ஸ்), பானுமதி(கனடா), பவானந்தன், உதயமதி, காலஞ்சென்ற குணவதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (11.12 2006) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் இருந்து கல்கிசை இந்து மாயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கட்டுக்காணி வீதி,*
*சாவகச்சேரி.* (56553)

தகவல்:
நாகரத்தினம்(தாய்)
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி முத்தையா தங்கரத்தினம்

சாவகச்சேரி, நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவன், குப்பிளானை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய திருமதி முத்தையா தங்கரத்தினம் (இளைப்பாறிய பாடசாலை அதிபர்) லண்டனில் 06.12.2006 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் சுப்பையா தம்பதியரின் சிரேஷ்ட மருமகளும் காலஞ்சென்ற முத்தையா (இளைப்பாறிய பாடசாலை அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை,கயிலாயபிள்ளை அருளம்மா, வள்ளிநாயகி, கதிர்காமநாதன், சிவசோதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் விமலேஸ்வரி(கனடா), இரட்ணபாலன் (வழக்கறிஞர் - லண்டன்), தர்மபாலன் (சுவிஸ்), சுசிலா (லண்டன்), தவபாலன்(இந்தியா), கோகிலா (கனடா), சியாமளா(லண்டன்), கேபாலன் (சுவிஸ்),ஷகீலா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் அருட்சோதி(பட்டயக்கணக்காளர் -கனடா), சியாமளா (சுவிஸ்), சத்தியநாதன் (லண்டன்), கோகிலா (இந்தியா), ஸ்ரீதரன் (கனடா), ரகுபரன் (லண்டன்), சாந்தி (சுவிஸ்), சுதாகரன்(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மத்தி,*
*சாவகச்சேரி.* (சி/51517)

தகவல்:
[illegible]
(இளைப்பாறிய [illegible] சேவை உத்தியோகத்தர்)

## 16ஆம் நாள் நினைவஞ்சலி



சைவச் செம்மல் ஸ்ரீமத்
### ச.அ.சீவரத்தினம் பரமேஸ்வரன்

(இணுவில், ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர தேவஸ்தான ஆதீனகர்த்தா)

இறைவை மண்ணில் 14.11.1939 விஸ்வநாதன் அடியில் 26.11.2006

சிறுமை கொள்ளச்சீவன் ஆனான்
இதனால் பரமேஸ்வரனானான்
சிவனின் நல்ல தூதன் ஆனான்
சிவனால் ஜீவ முக்தியு மானான்

கே.கே.எஸ். வீதி,
சிவன் கோயிலடி,
இணுவில் கிழக்கு,
சுன்னாகம்.

- குடும்பத்தினர்.

## ஆறாம் ஆண்டின் நினைவுகளில்



அமரர்
### சிதம்பரப்பிள்ளை செல்வரட்ணம்

மண்ணில் 11.11.1949 விண்ணில் 17.11.2000

ஆண்டுகள் ஆறாயின காலன் கணக்கு முடித்து
ஆண்டவன் அடியில் அன்புருவாய் நீங்கள் நின்று
விண்ணுறை தெய்வங்கள் வாழ்த்திடும் பேறுற்றீர் - ஆயினும்
மீண்டிடும் நினைவுகள் வாட்டிடும் உள்ளங்களில் - எத்தனை
ஆண்டுகள் சென்றாலும் நெஞ்சத்து
நினைவுகள்தான் அழிந்திடுமா..?

*கல்வயல்,*
*சாவகச்சேரி.* (56604)

குடும்பத்தினர்.

## இதய அஞ்சலி



மதிப்பிற்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்

### நடராஜா இரவிராஜ்

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/51510)

நலின்புரிச் சங்கர்,
பிரதேச செயலகம்,
தென்மராட்சி.

## மரண அறிவித்தல்கள்

### கனகசுந்தரம் நல்லம்மா



குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாக வும் கொண்ட கனகசுந்தரம் நல்லம்மா நேற்று (10.12.2006) ஞாயிற்றுக் கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பூலோகராசா (ராசி சில்க் உரிமையாளர்), காலம்சென்ற வில்வராசா, காலஞ்சென்ற சேனாதிராசா, காலஞ்சென்ற யோகராசா (பஞ்சன்) மற்றும் துரைராசா, பற்குணராசா, பொன்ராசா, இந்திராணி, ஜெயராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான ஞானம்மா, ஞானேஸ்வரி மற்றும் நகுலேஸ்வரி, சகுந்தலாதேவி, தனலெட்சுமி, குணசிங்கம் (கோபிகா ரெக்ஸ்ரைல்ஸ் உரிமையாளர்), கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகரா, சசிதரன், ரவிதரன், லலிதரா, புவனேந்திரன்,ஹதா, கீதா, கீதன், சசி, நிமலன், யசோதரா, காலஞ்சென்ற பிறேமலதா, காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் ஜெயக்குமார், அருந்ததி,சர்மிலா, சோபனா, சுசிதா, பிறேமலதா, பிரகலா, பிரதீபா, சுதன், சுயா, சுரேஸ், யசோ, காலஞ்சென்ற ஞானேந்திரன்(கண்ணா), சிவகௌரி, கவிதா- வைகுந்தவாசன், வனிதா, ஜெயதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40/6 புகையிரத நிலைய*
*கிழக்கு ஒழுங்கை,*
*கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*
*தொ.பே. 222 6742* (56708)

தகவல்
த.குணசிங்கம் - மருமகன்
(உரிமையாளர், கோபிகா ஆடையகம்,
கௌரி ஆடையகம்),
க.துரைராசா (மகன் )

### வீரசிங்கம் துருவசங்கரி (M.Sc., Moscow)



பருத்தித்துறை, தும்பளை வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும கொண்ட வீரசிங்கம் துருவசங்கரி 03.12.2006 ஞாயிற்றுக் கிழமை காலமானார்

அன்னார் அமரர் ச.வீரசிங்கம்(முன்னாள் அதிபர், ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி, புத்தூர்) - அன்னப்பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.12.2006) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.* (56710)

தகவல்
திருமதி லோகநாயகி இரத்தினம்
(சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## மனித உரிமைகளும் அரசியல் உரிமைகளும்

நேற்று - டிசெம்பர் மாதம் பத்தாம் திகதி - அனைத்துலக மனித உரிமை நாளாகும்.

ஒவ்வொரு மனிதனதும் உரிமைகள் மதிக்கப்படவேண்டும்; மற்றவர்களால் மீறப்படக்கூடாது. அவ்வாறு மீறுவது குற்றம். மக்களின் உரிமைகளைப் பேணுவதற்கு அரசாங்கம் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இத்தகைய பல அம்சங்களை உள்ளடக்கியதே ஐ.நா. மனித உரிமை சாசனம். அந்த சாசனத்தில் உள்ள விதிமுறைகள், வழிமுறைகள் குறித்த விழிப்புணர்வை உலக நாடுகள் எல்லாவற்றிலும் உண்டாக்கும் பொருட்டே மனித உரிமை தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

ஆனால், மனித உரிமைகள் தினத்தை அனுஷ்டிக்கக் கூடிய தகுதி இலங்கைக்கு உண்டா? மிகக் குறிப்பாக அரசாங்கத்துக்கு உண்டா? மிகப்பெரிய கேள்வி இது!

ஐ.நாவின் மனித உரிமைகள் பிரகடனத்தில் இலங்கை அரசாங்கமும் கைச்சாத்திட்டுள்ளது. மிக அண்மையில் மனித உரிமைகள் அமைச்சு ஒன்றை உருவாக்கி அதற்கு ஓர் அமைச்சரும் நியமிக்கப்பட்டிருக்கிறார். மனித உரிமை ஆணைக்குழு ஒன்றும் கடந்த சில வருடங்களாக இயங்குகிறது. உண்மைதான்.

ஆனால், மக்களின் மனித உரிமைகளைப் பேணுவதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு முன்னேற்றம் இல்லை. மிகமிகப் பின்தங்கிய நிலையிலேயே அது உள்ளது.

மனித உரிமைகளைப் பேணுவதற்கென சில சட்டங்கள் இந்த நாட்டில் உள்ளன. மறுப்பதற்கில்லை. ஆனால், அவற்றை ஒதுக்கித்தள்ளி மேலோங்கி நிற்கும்(Supersede) சட்டங்களைக் கொண்டு வந்து மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் இலங்கை அரசுகள் கைதேர்ந்தவை.

அவசரகாலச் சட்டம், பயங்கரவாதச் சட்டம் ஆகிய இரண்டும் உதாரணங்கள். இவை மக்களின் மிக மிக அடிப்படையான உரிமைகளையே பறித்தெடுக்கும் விதமாக அரசுகளால் அடிக்கடி நடைமுறைப்படுத்தப்படுவன.

நியாயமான காரணங்கள் என்று நம்பத் தகுந்த சில போர்வைகளைப் போர்த்திக்கொண்டு, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு எனக் கூறிக்கொண்டு, அரச, இராணுவ அதிகாரிகள் மக்களின் உரிமைகளை மீறுவதற்கு வகைசெய்யும் - இடம்கொடுக்கும் - சட்ட விதிகளைக் கொண்டு வருவது இலங்கை ஆட்சியாளருக்கு அப்போதும், இப்போதும், எப்போதுமே கைவந்த கலை.

குறிப்பாகச் சொல்வதானால், போர்க்காலங்களில் மட்டுமல்லாது சமாதான வேளைகளில் கூட, சட்டத்துக்குப் புறம்பாக சட்டத்தைப் பொருட்படுத்தாது தமிழர்களின் மனித உரிமைகளை நசுக்குவதில் இந்த நாட்டு ஆட்சியாளர்களுக்கு ஒரு 'தனித்திறமை' உண்டு.

ஆனால் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து அவற்றைப் பேணும் அமைப்புகள், வெளிநாடுகள் இலங்கை மீது குற்றச்சாட்டுகளை வைத்தால் அவை பொய்யானவை என்று தட்டிக்கழித்து விடுவது பல வருடங்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தந்திரமான உத்தி.

இப்போதெல்லாம், இலங்கை அரசினால் அவ்வாறு தற்காத்துக் கொள்ளமுடியாத, இக்கட்டான, நெருக்கடியான, சோதனையான காலமாக மாறிவருகிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மிக மோசமான நிலையை எட்டியுள்ளதாகக் கூறி, கடந்த மாதம் 27ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியம் ஐ.நாவின் மனித உரிமைக் கவுன்ஸில் கூட்டத்தில் பிரேரணை ஒன்றைக் கொண்டுவர இருந்தது.

அரசாங்கம் இது விடயத்தில் அதிக அக்கறை எடுத்து, மனித உரிமை மீறல்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள உள்ளதாக நம்பவைத்து, அந்தப் பிரேரணையை மூன்று மாதங்களுக்கு ஒத்திவைக்க ஐரோப்பிய ஒன்றிய நாடுகளை இணங்க வைத்துவிட்டது.

மனித உரிமை மீறல்களைத் தடுப்பத்தில், ஐரோப்பிய ஒன்றியத்திடம் அரசு சொன்னது தப்பாது நடைபெறுமா என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டியதில்லை.

இங்கு மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவதை, மோசமுற்றுச் செல்வதை உரிய படிமுறைகள், அவதானிப்புகள், ஊடாகக் கண்டறிந்த பிரிட்டன், இலங்கையை (வெள்ளைப் பட்டியல் எனக் கூறப்படும்) பாதுகாப்பான நாடுகள் அந்தஸ்தில் இருந்து நீக்கப்போவதாக அறிவித்துள்ளது.

இந்த ஏற்பாட்டையும் தடுத்துநிறுத்துவதற்கு தனது வழமையான தகிடு தத்தங்களை கையாள அரசு முனைந்தாலும் ஆச்சரியம் இல்லை.

எப்படியோ, எல்லோரையும் எல்லாக் காலமும் ஏமாற்ற முடியாது. உண்மையை மூழ்கடித்துவிடலாம் என்று நினைத்து விடக்கூடாது!

ஆயுத மோதல்களில் சிறுவர்களைப் பயன்படுத்தல் சம்பந்தமான ஐ.நாவின. விசேட தொடர்பாளர் அலன் றொக் வெளியிட்ட தகவலை - அரசாங்கப் படையினரின் ஆதரவுடன் கருணா குழுவினர் சிறுவர்களைக் கடத்தி மோதல்களில் ஈடுபடுத்துவதாகத் தெரிவித்த குற்றச்சாட்டை - பொய்யானது என்று கண்டித்திருக்கிறது மஹிந்த அரசு.

ஆனால் அமெரிக்காவின் மனித உரிமைகள் அவதானிப்பு நிலையம் (Human Rights Watch) என்ற அமைப்பு அலன் றொக் வெளியிட்ட கருத்தை நிரூபிக்கும் சான்றுகள் தன்னிடமும் உள்ளதாக அடித்துக்கூறியிருக்கிறது.

இலங்கையில் மனித உரிமை மீறல் விவகாரம் மேன்மேலும் பூதாகரமாகும் என்பதற்கு அரசின் சமீபத்திய ஏற்பாடுகள் கட்டியம் கூறுகின்றன என்பது மிகவும் தெளிவு.

மக்களின் சிவில் உரிமைகள் மீறப்படுவது ஒருபுறமிருக்க - ஐக்கியநாடுகள் சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தேசிய இனங்களின் சிறப்புரிமையான சுயநிர்ணய உரிமை குறித்து ஏறெடுத்துப் பார்க்கவும் பின்னிற்கிறது இந்த நாட்டு அரசு.

ஐ.நாவின் சிவில் மற்றும் அரசியல் பிரகடனம் சுயநிர்ணய உரிமை, தேசிய சிறப்புரிமை என்று வகுத்துள்ளது. ஆனால் தமிழர்கள் தமக்குரிய அந்த உரிமையை - சுயநிர்ணய உரிமையை - அனுபவிக்க வகை செய்வது என்ற சொற்றொடரே இலங்கை அரசுக்கு வேம்பாய்க் கசக்கிறது.

இதுவிடயத்தில் சர்வதேசம் தனது அக்கறையை - கவனத்தை - இனியாவது செலுத்தவேண்டியது இன்றியமையாதது என்பதனை உணர்ந்து கொள்ளவேண்டிய காலம் இது.

# புலிகளைத் தவிர தமிழர்களுக்கு வேறு எந்தச் சரணும் கிடையாது!

## கருணாநிதியின் மகள் கனிமொழி சொல்கிறார்

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர ஈழத் தமிழர்களுக்கு வேறு சரண் கிடையாது. இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் கருணாநிதியின் மகளும் கவிஞருமான கனிமொழி தெரிவித்துள்ளார்.

'குமுதம்' சஞ்சிகைக்கு அவர் அளித்த செவ்வியில் கூறியிருப்பதாவது:-

*கேள்வி:-* ராஜீவ் படுகொலைக்குப் பிறகு, இலங்கைப் பிரச்சினையில் இருந்த அனுதாபம் போய், அங்கே பிரச்சினை தலைதூக்கும் போதெல்லாம் இங்கே போராட்டம், உண்ணாவிரதம் இருப்பது என்பதெல்லாம் வெறும் சம்பிரதாய மாகிவிட்டது என்றால் ஒப்புக்கொள்வீர்களா?

*பதில்:-* "நிச்சயமாக ஒப்புக் கொள்ள மாட்டேன். ராஜீவ் படுகொலையை இலங்கைத் தமிழ் மக்கள் செய்யவில்லை. ஒரே ஒரு தவறுக்காக அந்த மக்கள் என்ன பாவம் செய்தார்கள்? அதனாலேயே 'அவர்களுக்கும் நமக்கும் உறவு விட்டுப் போய்விட்டது, அவர்கள் கஷ்டப்பட்டால் நமக்கு கவலையில்லை' என்பது என்ன நியாயம்? ஒரு காலத்தில் அவர்களைப் பற்றிப் பேசவே பயமாக இருந்தது உண்மை. நடுவில் போர் நிறுத்தம் அமுலில் இருந்தது. மக்கள் ஓரளவு பாதுகாப்பாக இருந்தார்கள். இப்போது இலங்கை அரசே வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிடுகிறது. ஆகவே, திரும்ப எல்லோரும் பேச ஆரம்பித்துள்ளார்கள். நீங்கள் புலிகளையும், மக்களையும் குழப்பிக்கொள்ளக் கூடாது." என்றார்.

## துன்னாலையில் கிளைமோர்; 2 சிப்பாய்கள் காயம்!

உடுப்பிட்டி,டிசெ.11

துன்னாலை, சோனப்பு வீதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் 2 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

சாந்தகுமார (வயது 29), ஜெயவர்த்தனா (வயது 23) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் சிகிச்சைக்காகப் பலாலிக்கு கொண்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளைமோர்த் தாக்குதலை அடுத்து அப்பிரதேசத்தில் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது. (202-155)

# பேராதனை வெளிவாரிப் பரீட்சை யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்

## உரியவர்களுடன் பேசி அரச அதிபர் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.11

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ளன.

இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 31ஆம் திகதிவரை கண்டியிலும், கொழும்பிலும் நடைபெறும் என்றும் - வழமை போன்று இப் பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படமாட்டாது என்றும் - அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அரச அதிபர் பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் கிளைப் பணிப்பாளருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு கலந்துரையாடினார். அதனைத் தொடர்ந்து இப் பரீட்சையை யாழ்ப்பாணத்திலும் நடத்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவது தொடர்பான ஏற்பாடுகளைச் செய்வது குறித்து யாழ்.அரச அதிபர் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருடன் நேற்றுக் கலந்தாலோசனை நடத்தினார்.

இந்தப் பரீட்சையை இங்கு நடத்த உரிய ஒழுங்குகளைச் செய்வதாக பதில் துணைவேந்தர் தெரிவித்தார். (அ-1)

# பெற்றோல் கணிசமான அளவுகளில் விநியோகம்

## மண்ணெண்ணெய்க்குத் தட்டுப்பாடு

அரியாலை,டிசெ.11

எரிபொருள் பங்கீட்டு அட்டைக்கு இப்போது அதிகரித்த அளவு பெற்றோல் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு 400 ரூபாவுக்கும், ஓட்டோவுக்கு 500 ரூபாவுக்கும், மோட்டார் காருக்கு 1, 000 ரூபாவுக்கும் பெறுமதியான அளவு இப்போது விநியோகிக்கப்படுகிறது.

இதனால் வாகன உரிமையாளர்கள் கள்ளச் சந்தையை நாடும் நிலை குறைந்துள்ளது.

இதேவேளை, கள்ளச் சந்தையில் பெற்றோலின் விலை லீற்றர் 160 ரூபாவாகச் சரிந்துள்ளது. சில வாரங்களுக்கு முன்னர் லீற்றர் 300 ரூபாவரை விற்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

எனினும் முக்கிய எரிபொருளான மண்ணெண்ணையின் விலை கள்ளச் சந்தையில் லீற்றர் 200 ரூபாவாக உயர்ந்துள்ளது.

மண்ணெண்ணை விநியோகம் தற்போது மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறுகின்றது. குடும்ப அட்டைக்கு சில வாரங்களுக்கு ஒன்று அல்லது இரண்டு தடவைகள் 2 லீற்றர் மாத்திரமே வழங்கப்படுகிறது.

மண்ணெண்ணையின் பாவனை அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. விறகுத் தட்டுப்பாடு, சமையல் எரிவாயு சந்தையில் கிடைக்காமை ஆகிய காரணங்களால் மண்ணெண்ணை பாவிப்பு அதிகரித்திருக்கிறது. இதனால் அதற்குத் தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (அ-17-79)

## யாழ்:- கச்சாய் பஸ்சேவை மீண்டும் நேற்று ஆரம்பம்

தென்மராட்சி,டிசெ.11

தென்மராட்சி தீனியார் சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் கொடிகாமத்திலிருந்து கச்சாய் ஊடாக யாழ்ப்பாணத்திற்கான மினிபஸ் சேவையினை மீண்டும் நேற்று ஆரம்பித்துள்ளனர்.

தினமும் காலை 6.30 மணிக்கு கொடிகாமத்திலிருந்து புறப்பட்டு கச்சாய் அம்மன் கோவிலடியில் தரித்து நின்று அங்கிருந்து சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து பகல் ஒரு மணிக்கு புறப்பட்டு அதே மார்க்கமாக கொடிகாமம் செல்லுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதே மார்க்கத்தில் முன்னர் மினி பஸ் சேவை நடத்தப்பட்டதாகவும் அண்மைய அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

# இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் இன்று கொழும்பில் போராட்டம்

கொழும்பு,டிசெ.11

வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து புத்தளம் அகதிமுகாம்களில் வாழும் முஸ்லிம்களின் அவல நிலை தொடர்பாக சர்வதேச நாடுகளுக்கும் விழிப்பூட்டும் நோக்கில் இன்று கொழும்பில் கவன ஈர்ப்புப் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.

கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் இன்று காலை 11.30 மணிமுதல் பிற்பகல் 2மணிவரை இடம்பெறவுள்ள இந்தக் கவன ஈர்ப்புப் போராட்டத்தை வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் முஸ்லிம்களின் நிலையைக் கண்காணித்துவரும் மக்கள் பணிமனை ஏற்பாடு செய்துள்ளது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து புத்தளத்தில் 16 வருடங்களாக அகதிகளாக அவல வாழ்க்கை நடத்திவரும் முஸ்லிம்களின் நலன்தொடர்பாக சர்வதேச சமூகம் கவனம் செலுத்தவேண்டும். அவர்களை மீள்குடியேற்ற உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் -

இது தொடர்பாக சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கவும் அவர்களின் உதவியைப் பெறவுமே இந்தக் கவனஈர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளோம் - என்று மக்கள் பணிமனையின் தலைவர் மௌலவி சுபியான் தெரிவித்துள்ளார். (ஐ)

## நாளை

கார்த்திகை 26
செவ்வாய்க்கிழமை
12.12.2006
திதி : சப்தமி
முற்பகல் 8.39
நட்சத்திரம் : பூரம்
முன்னிரவு : 10.15
சுப[illegible] : [illegible]
ராகு[illegible] : [illegible]

# காத்தான்குடியில் ஐந்தாவது நாளாக ஹர்த்தால், கடையடைப்பு தொடர்கிறது

கொழும்பு, டிசெ.11

காத்தான்குடியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் 'தரிக்கத்துல் முப்லிகீன்' அமைப்பின் ஸ்தாபகர் அப்துல்லாஹ் பயில்வானின் உடலை அங்கிருந்து அகற்றக் கோரி காத்தான்குடி மக்கள் மேற்கொண்டு வரும் ஹர்த்தால் கடையடைப்புப் போராட்டம் ஐந்தாவது நாளாக இன்றும் தொடர்கிறது.

இவரது சடலத்தை அகற்றக் கோரி ஊர் மக்கள், மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்த மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன. இவ்விசாரணையில் வழங்கப்படும் தீர்ப்பைப் பொறுத்தே ஹர்த்தால் நடவடிக்கையை நிறுத்துவது பற்றித் தீர்மானிக்கப்படும் என்று ஊர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

வியாழன் அதிகாலை மரணமான 'தரிக்கத்துல் முப்லிகீன்' அமைப்பின் ஸ்தாபகர் பயில்வானின் உடல் அன்றைய தினமே காத்தான்குடியிலுள்ள அந்த அமைப்பின் தலைமைக் காரியாலயத்தின் வளாகத்திற்குள் புதைக்கப்பட்டது.

பயில்வானின் உடலை அகற்றக் [illegible] வியாழன் முதல் [illegible] போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்த அமைப்பினர் வீடுகளுக்குத் தீ மூட்டினர். வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகையையடுத்து ஆர்ப்பாட்டத்திலும், உண்ணாவிரதப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

உடனடியாகப் பயில்வானின் உடலை அகற்ற வேண்டுமென உத்தரவிடக்கோரி காத்தான்குடியைச் சேர்ந்த ஐவர் மனுக்களை மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய் தனர். அம்மனுக்கள் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

அதுவரைக்கும் தொடர்ந்து ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுக் கொண்டு வருகிறது. இது தொடர்பாக நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்கள், இளைஞர் சம்மேளனம் என்பன கூட்டம் ஒன்றையும் நடத்தின.

அக்கூட்டத்தில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரமுகர்களும், ஊர் மக்களும் கலந்துகொண்டு தத்தமது கருத்துகளைத் தெரிவித்தனர். இருந்தும் தீர்மானம் எதுவும் எட்டப் படாமல் கூட்டம் நிறைவு பெற்றது. இதனால், ஹர்த்தால் இன்றும் தொடர் கிறது.

அசம்பாவிதங்கள் எதுவும் ஏற்படவண்ணம் காத்தான்குடி நகரில் பொலிஸாரும், படையினரும் பாதுகாப் புக் கடமையில் நிறுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இலக்கியப் பேரவையின் 2004க்கான விருது பெறும் நூல்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 11

யாழ். இலக்கிய வட்டத்தின் இலங்கை இலக்கியப் பேரவை 2004ஆம் ஆண்டிற்கான இலக்கியப் பரிசு பெறும் நூல்களை அறிவித்துள்ளது.

அவற்றில் விருது பெறும் நூல்களின் விவரம் வருமாறு:

ஆய்வு: டானியல் எழுத்துக்கள் (கலாநிதி செ. திருநாவுக்கரசு), யாழ்ப்பாணம். பிரபந்த இலக்கியம்: (க.நாகேஸ்வரன்), நாவல்: ''சில்லிக்கொடி ஆற்றங்கரை'' (ஆ.மு.சி. வேலழகன்), சிறுகதை: தேவன் யாழ்ப்பாணம். சிறுகதைகள்: (தேவன் - யாழ்ப்பாணம்),

கவிதை: ''கைக்குள் சிக்காத காற்று'' (த.ஜெயசீலன்), சிறுவர் இலக்கியம் பாப்பாப்பா (கவிஞர்கல்வயல் வே. குமாரசாமி), பல்துறை : மட்டக்களப்பு நாட்டாரியல் (வ. சிவசுப்பிரமணியம்).

2004ஆம் ஆண்டுக்கான சான்றிதழ் பெறும் நூல்களின் விவரம் வருமாறு:

ஆய்வு: பழையதும் புதியதும் (கலாநிதி பேராயர் சு. ஜெபநேசன்), நாட்டார் வழக்காற்றியல்: (கலாநிதி கி. விசாகரூபன்), நாவல்: பச்சை வயல் கனவு (தாமரைச் செல்வி), சிறுகதை - யாவரும் கேளிர் (யோகேஸ்வரி கணேசலிங்கம்) -

புதிய கதைகள்: (மலைமகள்), சிறுவர் இலக்கியம்: மாறன் , மணிக்கதைகள்: (சு.பொ. கனகசபாபதி), பல்துறை: அந்தக் காலத்து யாழ்ப்பாணம் (சி.சு.நாகேந்திரன்), அச்சுத்தாளின் ஊடாக ஓர் அனுபவப் பயணம் (டொமினிக் ஜீவா). (அ-203)

### கோப்பாய், நாவாந்துறையில் 5 கிரனேட்டுக்கள் மீட்பு

கோப்பாய் தெற்கு, நாவாந்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் கிரனேட்டுக்கள் மீட் கப்பட்டுள்ளன என பாதுகாப்புத் தரப்பு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப் படையில் கோப்பாய் தெற்கில் மூன்று கிரனேட்டுக்களும் நாவாந்துறையில் இரண்டு கிரனேட்டுக்களும் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (1)

# பம்பலப்பிட்டி இராமநாதன் கல்லூரி அதிபர் அலுவலகத்துக்கு சீல் வைப்பு

கொழும்பு, டிச. 11

பம்பலப்பிட்டி இராமநாதன் இந்துக் கல்லூரி அதிபர் திருமதி எஸ்.கயிலாதநாதனைக் கடந்த 30ஆம் திகதிமுதல் கட்டாய விடுப்பில் செல்ல உத்தரவிடப்பட்டது.

அத்துடன் அவர் பொறுப்பில் உள்ள உத்தியோகபூர்வ ஆவணங்களையும் காரியாலய உபகரணங்களையும் பொறுப்பு வாய்ந்த அதிகாரியிடம் ஒப்படைக்குமாறும் பணிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அதிபர் அந்தப் பணிப்புரைக்கு ஏற்ற நடவடிக்கை எடுக்கத் தவறியதன் காரணத்தால் கடந்த வெள்ளியன்று அவரது அலுவலகம் சீல் வைக்கப்பட்டதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்காலிகமாக பொறுப்புகள் அனைத்தும் உப அதிபரான ஓங்காரமூர்த்தியிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (க)

# "டயலொக்" மாதாந்த வாடகை அறவிடாதிருப்பது குறித்து பரிசீலனை

யாழ்ப்பாணம், டிசெ. 11

''டயலொக்'' கைத்தொலைபேசிச் சேவை நிறுத்தப்பட்ட போதிலும் அதற்கான மாதாந்த வாடகைக் கொடுப்பனவை அறவிடுவதை நிறுத்துவது தொடர்பாக பரிசீலனை செய்யப்படுவதாகத் தெரியவருகிறது.

கைத் தொலைபேசி சேவை நிறுத்தப்பட்டபோதும், மாதாந்த வாடகைக் கொடுப்பனவு அறவிடப்பட்டு வருவது தொடர்பாக சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான அமைப்பு சம்பந்தப்பட்ட நிறுவனத்துக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்தது.

இக்கொடுப்பனவை அறவிடுவதைக் கைவிடுமாறு அந்தக் கடிதத்தில் கோரப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பரிசீலனைசெய்து அறிவித்தல் வெளியிடப்படும் என்றும் தொலைபேசி நிறுவனம் தனது பதில் கடிதத்தில் தெரிவித்திருப்பதாக அறிய வந்தது. (அ-1)

# அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தென் ஆபிரிக்கா செல்கின்றார்

பிரிட்டோரியா, டிசெ. 11

தென் ஆபிரிக்க ஜனாதிபதி தபோ மெபிகியின் அழைப்பை ஏற்று சமூக சேவைகள் மற்றும் சமூக நல அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அடுத்த வருடம் தென் ஆபிரிக்கா செல்கிறார்.

இப்பொழுது செயலிழந்து கிடக்கும் ஆபிரிக்க - ஆசிய தோழமைச் சங்கத்துக்கு புத்துயிர் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து தென் ஆபிரிக்க ஜனாதிபதியுடன் கலந்தாலோசனை நடத்தவே, இலங்கை ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியாக அமைச்சர் டக்ளஸ் தென் ஆபிரிக்கா செல்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி நெல்ஸன் மண்டேலா உட்பட அரசாங்கத் தலைவர்கள், அமைச்சர்கள் முதலானவர்களையும் அமைச்சர் சந்தித்துப் பேசவிருக்கிறார்.

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதியை இரு தரப்பினரிடம் இருந்து பெறுவதில் சிக்கல் இருப்பதாகவும் குழு தெரிவித்துள்ளது. (அ-1)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாது என்றும் - அவர் கூறினார்.

நேற்று முற்பகல் மட்டக்களப்பு வாகரை நோக்கி படையினர்நடத்திய பல்குழல் தாக்குதலில் 17 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 40 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என்றும் வெளியான தகவல்கள் குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வம்மிவெட்டுவான்; பால்சேனைப் பகுதியில் அமைந்துள்ள இடம்பெயர்ந்தோர் தங்கியிருந்த நலன்புரி நிலையங்களில் வீழந்து வெடித்த ஷெல்களால் இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## திருமலை - மட்டக்களப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) .

தங்கியிருந்த பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும் - விடுதலைப் புலிகள் தரப் பில் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் -

விடுதலைப் புலிகள் மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தி தம்மீது தாக்குதல் நடத்தியதாகவும், தாம் சிவிலியன்கள் மீது தாக்குதல் [illegible]வில்லை என்றும் படைத் தரப்பினர் மறுத்தனர்.

**புலிகள் தரப்புக் கூறுவது...**

திருமலை மற்றும் வாகரை நோக்கிய இராணுவத்தினரின் முன்னேற்ற முயற்சி விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. ஞாயிறு காலை மாங்கேணி மற்றும் கட்டுமுறிவு படை முகாம்களில் இருந்து விடுதலைப் புலிகளின் முன்னரங்க நிலைகள் மீது முன்னேறிய சிறிலங்காப் படையினரை வழிமறித்து கிழக்குக் கண்டலடி, பனிச்சங்கேணி பாலத்தில் உக்கிர மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இன்றைய படையினரின் முன்னேற்ற முயற்சிகள் அனைத்தும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது - என்று புலிகளின் படைத்துறைப் பேச்சாளர் இளந் திரையன் தெரிவித்தார்.

நேற்றைய மோதலின் போது கிழக்குக் கண்டல் மற்றும் பனிச்சன்கேணி பாலத்தில் இடம்பெற்ற உக்கிர சமரில் 3 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக இளந்திரையன் மேலும் தெரிவித்தார்.

கட்டுமுறிவு படைமுகாமிலிருந்து தோணி தாண்டமடு என்ற இடத்திற்கு முன்னேற முயன்ற படையினரின் முன்னேற்ற முயற்சியும் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் இம் முறியடிப்புத் தாக்குதலில் 4 போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

**இராணுவத் தரப்புக் கூறுவது...**

இந்தச் சமர்களில் படைத் தரப்பில் 12 படையினர் கொல்லப்பட்டு மேலும் 51 படையினர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இதனிடையே கஜுவத்தை, கிரிமிச்சைக்குளம், கட்டுமுறிவுக்குளம் ஆகிய களமுனைகளில் விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற நேரடி மோதல்களில் பன்னிரண்டு படையினர் கொல்லப்பட்டு 51 படையினர் காயமடைந்திருப்பதாக இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

கஜுவத்தை இராணுவ முகாம் ஷெல் தாக்குதலுக்கு இலக்கானதாகவும் இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது. வாகரை, கஜுவத்தை, பனிச்சன்கேணி, மருதங்கேணி, கட்டுமுறிவு, கதிரவெளி, வெருகல் பகுதிகளில் பரஸ்பர ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

இராணுவம் மேற்கொண்ட பதில் தாக்குதலில் புலிகள் தரப்பில் 20 இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டு, 60 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர் என தேசிய பாதுகாப்புத் தகவல் மையம் தெரிவித்தது.

அத்துடன் புலிகளின் மோட்டார் தாக்குதல் மையம் ஒன்று அழிக்கப்பட்டதாகவும், அதில் ஆயுதங்கள் அழிக்கப்பட்டதாகவும் அந்த மையம் மேலும் தெரிவித்தது. (அ-1)

## இராமேஸ்வரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடவையாக மரப்பெட்டி ஒன்று சிக்கியது. அந்தப் பெட்டியை திறந்து பார்த்தபோது, அதற்குள் றொக்கட் குண்டு ஒன்று இருந்ததை அவர்கள் கண்ட னர்.

அந்தக் குண்டைப் பாதுகாப்பாகக் கரைக்கு கொண்டுவந்து கடற்படையினரிடம் கையளித்தனர். அக்குண்டு சோதனைக்காக சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

நேற்று அதிகாலையும் அதே கடற் பகுதியில் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தவேளை சிக்கிய மரப்பெட்டியை திறந்து பார்த்தபோதும், அதற்குள் இரண்டு றொக்கட் குண்டுகளை கண்டெடுத்தனர்.

இந்தக் குண்டுகளையும் மீனவர்கள் கடற்படையினரிடம் நேற்றுக் கையளித்துள்ளனர்.

இக்குண்டுகள் எங்கிருந்து கடத்தப்பட்டுள்ளன என்பது குறித்தும் எந்த வகையைச் சேர்ந்தவை என்பதும் குறித்தும் தமிழ்நாடு கடற்படையினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (அ-1)

## போர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் பெருமளவில் மீறப்படலாம் என்று உணர்ந்த சில மிதவாத அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் அந்நிலைமை உருவாவதைத் தவிர்ப்பதற்காகக் கூட்டணி ஒன்றை உருவாக்குவது தொடர்பாகக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

தற்போது அரசில் இணைந்திருக்கும் கூட்டணிக் கட்சிகளின் பிரமுகர்களால் உருவாக்கப்படவிருக்கும் புதிய கூட்டணிக்கு அவர்களே முதுகெலும்பாக இருப்பர் எனத் தெரிகிறது. யுத்தமொன்றைத் தொடங்கக்கூடிய வகையில் செயற்படும் அரசின் நடவடிக்கை மீது அதிருப்தி கொண்டே இவர்கள் இக்கூட்டணிக்கு பக்கபலமாக இருக்க முடிவெடுத்துள்ளனராம்.

அரசில் இணைந்திருக்கும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, தேசிய ஐக்கிய முன்னணி, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மையினக் கட்சிகளின் முக்கியஸ்தர்கள், அரசால் புதிதாக நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் துண்ண விதிகள் தொடர்பாகவும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அரசு மீண்டும் முழுமையாக நடைமுறைப்படுத்த முயற்சிப்பது தொடர்பாகவும் அதிருப்தியடைந்துள்ளதோடு இந்த விடயத்தில் மிகவும் எச்சரிக்கையாகவும் உள்ளனர்.

இவர்களும் இந்தப் புதிய கூட்டணியில் பெரும்பாலும் இணைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

1994 இல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையின் கீழ் இதே நோக்கை அடிப்படையாகக் கொண்டு இவ்வாறானதொரு கூட்டணி உருவாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிவிக்கப்பட்ட பாடசாலைகள் அமைந்துள்ள இடங்களில் ஷெல் தாக்குதல் அச்சம் காரணமாக பதற்ற நிலை காணப்படுகிறது.

பதற்றம் நிறைந்த பகுதிகளில் பரீட்சை நிலையங்களை இடம்மாற்றி பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் மாவட்ட கல்வி அதிகாரிகள் முயற்சி எடுத்துள்ளனர். பரீட்சை திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகும் என்று அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## படுவான்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேனைக்கு ஊடாகப் படையினர் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டனர் என்றும் -

இந்நடவடிக்கையில் படையினருடன் துணை இராணுவக் குழுவினரும் இணைந்து ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களது கூட்டுத் தாக்குதலுக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்ச் சமரில் 10 இற்கும் மேற் பட்ட படையினர் படுகாயமடைந்தனர் என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பத்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிறது. இளைஞர்களைக் கடத்திய நபர்கள் 15-20 இற்கும் இடைப்பட்ட வயதினர் என்று பஸ்ஸில் பயணம் செய்த பயணிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)


A/L 2007/ 2008
பொருளியல் G. ரீதீபன் வகுப்புகள்
நடைபெறும் இடங்கள்
A.A.C.- அரியாலை
IBS - நல்லூர்
IBS - சுண்டுக்குளி
OXFORD - திருநெல்வேலி
★ நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறவும்.

இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளது.
MCS Supported By UNDP/JRRP
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 15-12-2006 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(பரமேஸ்வரா சந்தி அருகே)

G.C.E. (O/L) - 2006
மேல்மாகாண பரீட்சை வினாத்தாள்கள்
★ கணிதம்
★ விஞ்ஞானம்
★ சமூகக்கல்வி
★ வணிகக்கல்வி
★ தமிழ்
★ சித்திரம்
பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்

A/L DAY CLASS
ACC.: P. பகீரதன்
Mon - Fri - 10.30 - 12.30
B.St.: K. முரளி
Mon - Fri - 12.30 - 2.00
Eco..: N.B.சுஜீந்தன்
Mon - Fri - 2.00 - 3.00
புதிய பிரிவு ஆரம்பம்
11 - 12 - 2006
திங்கள் 10.30 மணி
நாவலர்

திருநெல்வேலியில்...
A/L 2007 / 2008
Eco.: N.B. சுஜீந்தன்
2007: Sat.,Sun. - 12 - 1
2008 : Tue., Wed. - 4 -5
ACC.: P. பகீரதன்
2007: Tue.,Wed. - 3 - 4
2008 : Tue., Wed. - 4 -5
B.St.: K. முரளி
2007: Sat.,Sun. - 11 - 12
2008 : Sat., Sun. - 12 - 1
புதிய பிரிவுகள் ஆரம்பம் 12.12.2006 செவ். 3 மணி
நாவலர்
பலாலி வீதி, திருநெல்வேலி.


## மரண அறிவித்தல்

### பூதன் ஞானசேகரம் (ஞானம்)



அம்மன் வீதி, தையிட்டியைப் பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பூதன் ஞானசேகரம் நேற்று (10.12.2006) ஞாயிற் றுக்கிழமை காலமானார்.

அன்னார் பூதன் - சின்னப் பிள்ளையின் அன்பு மகனும் இந்திராவின் பாச மிகு கணவரும் அமரர் சந்திரலேகாவின் அன்புச் சகோதரரும் உஷா, துஸ்யந்தினி (யாழ். பல்கலை 1ஆம் வருடம் கலை) ஆகியோரின் பாசமிகு தந்தை யுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (11.12.2006) திங்கட்கிழமை இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரிக்காக கொட்டுப் பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

த.முகவரி:
சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய்.
நி.முகவரி :
அம்மன் வீதி, தையிட்டி, காங்கேசன்துறை.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org